# சக்தி

மலர் 6, காலாண்டு இதழ் III 2004.

சமாதானம்

அபிவிருத்தி

ஒருமைப்பாடு

மதுவிலக்கு

சூழல் பாதுகாப்பு



JG

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....

சக்தி [redacted] உள்ளடக்கம்


- இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து
- திட்ட இணைப்பாளரின் செய்தி
- விடுதலைக்கு வழி எழுதுவோம் - கவிதை
- சமூக சேவை - கட்டுரை
- சமதானத்தை நோக்கி ஒரு பார்வை - கட்டுரை
- குடியின் குணம் - கவிதை
- சனத்தொகை அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் - ஆய்வுக்கட்டுரை
- கல்வியின் சமூகப்பெறுமானம் - கட்டுரை
- சூழல் விழிப்புணர்வு
- ஆறிலும் ஐந்து
- பியர் குடித்தால் உடல் சூடு தணியுமா?
- மதுவகைகளில் அற்ககோலின் செறிவு
- சக்தி அமைப்பின் ஊர்காவற்றுறைப்பிரிவின் செயற்பாடுகள்
- சக்தி அமைப்பின் உடுவில், தெல்லிப்பளைப்பிரிவின் செயற்பாடுகள்
- திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன இலாபம் - வீதி நாடகம்
- கருச்சுமப்போம் வாரீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து...

அன்பான வாசகர்களே!

போரூட் [redacted]மேற்கு வெளியிடும் "**சக்தி**" 2004 ஆவணி இதழ் உங்களினூடே சக்தி பெறுகின்றது.

சமூக கதைகளும், கவிதைப் பூங்காவும் இதழை அலங் கரிக்கின்றது. வேதனையின் உச்சத்தில் விரக்தியின் விழிப்பில் பயணித்துக் கொண்டிருக்கும் உடனடிப் பார்வையில் மகிழ்வுக்கு அர்த்தம் கொடுத்துக் கொண்டிருக்கும் மனித சமூகத்தின் பாதையை நேர்செய்யும் பொருட்டு மனித சமூகத்தின் இறந்த கால, நிகழ்கால வாழ்வு இவ் இதழில் ஆராயப்பட்டு எதிர்கால வாழ்வுக்கான சக்தியை வழங்கும் முகமாக எமது சக்தி இதழ் இங்கு வடிவம் பெறுகிறது.

"சக்தி" இதழை வெளியிட உதவிய அனைவருக்கும் ஆக்கங்களைப் படைத்த படைப்பாளிகளிற்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தமிழினி - நற்குணம்.**

*இதழாசிரியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்ட இணைப்பாளரின் செய்தி

நீண்ட இடைவெளியின் பின்னரான 'சக்தி'யின் வரவு குறித்து மகிழ்ச்சி அடைபவர்களில் நானும் ஒருவன் ஆகின்றேன். பல்வேறு பட்ட தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த இதழ் வெளியீட்டின் தொடர்ச்சித் தன்மை கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டிருந்தமை வருத்தத்திற்குரியது.

மது, புகைபொருள், போதைப்பொருள் தவிர்ப்பு என்பது போரூட் நிறுவனத் திட்ட செயற்பாடுகளின் மையமாக விளங்குவதுடன் அது போரூட் நிறுவனத்தின் தனித்துவத் தன்மையை ***(Uniqueness)*** புலப்படுத்தும் ஒன்றாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இக்கொள்கை சார்ந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான எமது பங்காளித்துவ நிறுவனமான 'சக்தி' அமைப்பின் பல்வேறு செயற்பாடு களின் ஒரு வடிவமாக இந்த 'சக்தி' இதழ் விளங்குகின்றது.

ஒருங்கிணைந்த சமூக அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு போரூட் நிறுவனத்தின் செயற்திட்டங்கள் மக்களின் பங்குபற்றலுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இச்சமூக அபிவிருத்தியை முன்னெடுப் பதில் மது, புகைபொருள் மற்றும் போதைப்பொருள் பாவனை பாரிய தடைக்கற்களாகக் காணப்படுகின்றன. இத்தீய சக்திகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்காமல் வெறுமனே உதவித்திட்டங்களை வழங்குவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவது என்பது பாத்திரத்தில் உள்ள துவாரத்தை அடைக்காது நீரை ஊற்றுவதற்கு ஒப்பானதாகும். எனவே மது, புகைத்தல், போதைப் பொருள் பாவனை போன்ற தீய பழக்கங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதன் ஊடாக ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமான சேமிப்பையும் ஏற்படுத்தி அதன்வழி மக்களை முன்னேற்றத் திற்கு இட்டுச் செல்வதும் எமது ஒரு நோக்காக உள்ளது. மேலும் ஏ-9 பாதை திறப்பின் பின்னரான அதிகரித்த மது, புகைபொருள், போதைப்பொருள் பாவனை மக்களின் முன்னேற்றத்திற்கு அதிலும் குறிப்பாக இளம் சமூகத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே இதற்கெதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பது காலத்தின் தேவையாக உள்ளது. இப்பாரிய பணியை முன்னெடுக்கும் நோக்குடன் சக்தி அமைப்பானது மீளவும் புனரமைக் கப்பட்டு அதனூடான கிராமிய ரீதியான விழிப்புணர்வு நடவடிக்கைகள் சர்வதேச தினங்கள் (மது, புகைப்பொருள் மறுப்புத் தினங்கள், நல்லொழுக்கத் தினம், உலக சுற்றாடல்தினம்) நினைவாக நிகழ்வுகள், கருத்தரங்குகள், சிரமதானங்கள், விழிப்புணர்வு போட்டிகள் நடாத்துதல் மரநடுகை போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் மற்றொரு வடிவமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும் புதிய படைப்பாளிகளுக்கும் களம் அமைக்கும் நோக்குடன் இந்த 'சக்தி' இதழ் வெளியிடப்படுகிறது.

எனவே காலத்தின் தேவையை உணர்ந்து இந்த சக்தி அமைப்பைப் புனரமைப்புச் செய்து அதன் செயற்பாடுகளை மீளவும் ஆரம்பிக்க உதவிய சக்தி அமைப்பின் அங்கத்தவர்களுக்கும் தொடர்புடைய ஏனையோருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றேன். சக்தியின் பணி சமூக வெற்றியின் கனிகளாக அமையட்டும்.

**அ.டெனி**

*திட்ட இணைப்பாளர்,*
*போரூட் யாழ்.மேற்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைக்கு வழி எழுதுவோம்

வாழ்க்கை எனும்
போர்க்களத்தில் போராட
புறமுதுகு காட்டிய
புல்லறிவாளன் நானே!!

புகைக்குள்ளும்...
போதைக்குள்ளும்...
புகலிடம் தேடிக்கொண்ட
கோழையும் நானே.

துன்பம் பேரலை கண்டு
துணிவிழந்து நின்றேனே!
வாழ்வை எதிர்கொள்ள
பயந்து தினம் மதுவுக்குள்ளே
ஒளிந்து கொண்டேனே.

துன்பத்தைக் கண்டு மனம்
துணியாத காரணத்தால்....
வாழ்க்கை எனும் போர்க்களத்தில்
போராட திராணியற்று...!!

மதுவெனும் விசம் உண்டே வாழ்கின்றேன்.
விடுதலைக்கு (மனுப்போட) வழி
எதுவோ?

**அ. றிசோனியா**

குழந்தை யேசு சனசமூக நிலையம்
சீந்திப் பந்தல், இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகசேவை

உயிரினம் தோன்றிய காலத்திலிருந்தே அவை தமக்குள்ளே ஏதோ ஒரு வகையில் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ்ந்து வருவதோடு ஏதோ ஒரு வகையில் தமக்கிடையே உதவி புரிந்தும் வருகின்றன. இயற்கையின் படைப்பே, உயிரினங்கள் தமக்கு கிடைப்பவற்றை ஒற்றுமையுடன் பகிர்ந்து இன்புற்று வாழவேண்டும் என்பதே ஆகும். ஆனால் இன்று மனித இனம் மட்டும் அதற்கு விதிவிலக்காக தான்தோன்றித்தனமாக சுயநலமாக வாழ்ந்து வருகிறது. இந்நிலை மாறவேண்டும். மனிதன் சிந்தித்து செயலாற்றக் கூடிய உயிரினம். அவன் மனிதநேயத்தோடு மனிதனாக வாழவேண்டும். ஒற்றுமையோடு உடன் பிறந்த சகோதரர்களாக ஒரு குடும்பமாக வாழவேண்டும். அவ்வாறு அவன் வாழ முடியுமா? அவ்வாறு வாழ்வதற்கு என்ன செய்யவேண்டும்? என்ற வினாக்கள் எம்முன் விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றன. இதற்கு விடை என்ன? சற்று சிந்திப்போம். செயற்பட வழி பிறக்கும்.

ஆதியில் மனிதன் எவ்வித பேதமுமின்றி உயிரினம் என்ற நிலையில் ஒன்றுசேர்ந்துதான் வாழ்ந்தான். பின்பு காலம் மாறமாற அவனது சிந்தனைகளிலும் மாற்றம் ஏற்பட்டது. அது அவனது செயற்பாட்டை மாற்றியது. அந்த மாற்றம்தான் பேதங்களுடன் கூடிய இன்றைய மனித சமூகம். மனிதனால் மாற்றப்பட்ட சமுதாயத்தை அவன்தான் திரும்பவும் மாற்றியமைக்கவேண்டும். அதற்குரிய வழிதான் சமூகசேவை என்ற உன்னத செயற்பாடு.

சமூக சேவை என்பது ஒருவன் தனக்குமட்டும் பயனுள்ளவனாக வாழாது தன்னை சார்ந்தவர்களும் பயன்பெறும் வண்ணம் வாழவேண்டும் என்ற நோக்கில் செயற்படுத்தப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளாகும். இன்னும் சற்று ஆழமாக சிந்திப்போமாயின் தன்னை சார்ந்தவர்களுக்கு செய்கின்ற சேவையினையும் கடந்து தன்னோடு தொடர்பற்றவர்களும் பயனடையும் வண்ணம் வாழும் வாழ்வை குறிப்பதாக அமையும். இவ்வுண்மையினையே திருமூலர் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற அடிகளால் குறிப்பிடுகின்றார்.

இந்த சமூக சேவையை செய்வதற்குரிய காலம் எது என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். 16, 17 வயதினில் தான் சமூக சேவை செய்யவேண்டும் என்ற சிந்தனை தோன்றுகின்றது. வளர்ந்து வரும்போது அதிகளவு ஈடுபாடு சமூகசேவை செய்வதில் ஏற்படுகிறது. 30 வயதிற்குப் பிற்பாடு அந்த சிந்தனை தலைமைத்துவ சிந்தனையாக மாற்றம்பெறுகின்றது. இது உளவியலாளர்களது கருத்தும்கூட. இந்த 16-30 வரைக்குட்பட்ட காலங்களில்தான் சமூகசேவை செய்யவேண்டும்."காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதற்கிணங்க இந்தப்பருவம் வேகம், விவேகம் இரண்டும் இணைந்த பருவமாக இருப்பதால் அப்பருவத்தினை தகுந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

சமூக சேவையில் ஈடுபடுபவர்கள் முதலில் அறிந்திருக்க வேண்டிய விடயம் என்னவென்றால் சமூகத்தில் வேலை செய்யும் பொழுது அதனைத் தடுப்பதற்கோ குற்றம் சொல்லி கெடுப்பதற்கோ சிலர் முயற்சி செய்துகொண்டே இருப்பார்கள். அதனைக் கண்டு பயந்தோ கவலை கொண்டோ பின்வாங்கக்கூடாது. அந்த எதிர்ப்புக்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு முன்னேற வேண்டும்.இதற்காக அவர் சிறு பண்புகளை தன்னகத்தே வளர்த்துக்கொள்வேண்டும். அவையாவன பொறுமை, சகிப்புத்தன்மை, தியாகஉணர்வு, இனிமையாக பேசுதல், மன உறுதி என்பனவாகும். வாழ்க்கையில் எந்தப்பிரச்சினை வந்தாலும் இவற்றின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை எதிர்கொள்ள முடியும். "ஓடு மீன் ஓட உறுமீன் வரும்வரை வாடி இருக்குமாம் கொக்கு" என்பதற்கிணங்க அற்ப விடயங்களுக்கு ஆசைப்படாமல் எமது இலக்கினை நோக்கி பொறுமையுடன் செல்வோமாயின் எமது சேவையினை பெறமுடியும். மாறாது என்ற சொல்லைத்தவிர மற்றெல்லாம் மாறும். முடியாது என்ற சொல்லைத் தவிர மற்றெல்லாம் முடியும் ஏனெனில் இன்று புகழ்பெற்ற பெரியோர்கள் செய்த அரிய செயல்கள் எல்லாம் ஒரு காலத்தில் செய்ய முடியாது என்று கூறப்பட்டவைதான் என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என பலர் கூறுகிறார்கள் ஆனால் அவர்கள் எந்த அளவுக்கு அதில் உறுதியாக இருக்கிறார்கள், எந்த அளவுக்கு சேவை செய்கிறார்கள் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். தான் பிறந்த சமூகத்திற்கு, தனது கிராமத்திற்கு சேவைசெய்ய முடியாதவன் வேறெந்த கிராமத்திற்கோ, சமூகத்திற்கோ சென்று சேவை செய்வதில் பலன் இல்லை. அதாவது வீட்டில் தாய் பசியோடு இரக்க சன்னதிமுருகன் கோயிலில் அன்னதானம் கொடுப்பதால் எந்த நன்மையும் ஏற்படாது. குளம் நிரம்பிய பின்புதான் வயலுக்கு நீர் பாய்ச்சவேண்டும். அதேபோல தன் சமூகத்திற்கு செய்யவேண்டியவற்றை செய்தபின்பே ஏனைய எல்லா சேவையையும் தொடரவேண்டும். சமூகசேவை செய்ய வேண்டும் என்பதற்காக முழுநேரமும் அதில் ஈடுபடவோ முழுப் பணத்தையும் செலவிடவேண்டும் என்றோ நினைக்கக் கூடாது. "தனக்குப் பின்தான் தானம்" என்பதற்கிணங்க வீணாகக் கழிக்கின்ற வாழ்நாளின் ஒரு பகுதியை இச்சேவைக்கு அர்ப்பணிக்கலாம். தமது வருமானத்தின் ஒரு சிறுபகுதியை இச்சேவைக்குச் செலவிடலாம். அதற்குமேலாக தனிமனிதனும் சமூகமும் தனித்தனியே பிரிக்கமுடியாத அளவிற்கு இணைந்துள்ளன. ஓடும் சிலாகையும்போல் இத்தொடர்பு காணப்படுகின்றது. சலாகை வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து பழுதாகாமல் இருப்பதற்கு ஓடு அவசியம் அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரி ஓடு மாட்டுவதற்கு சலாகை அவசியம். அதேபோன்று தனிமனிதன் வாழ சமூகம் துணைபுரிகின்றது. சமூகம்வாழ தனிமனிதன் துணைநிற்கின்றான். இவ்வுண்மையினை நாம் எல்லோரும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த சமூக சேவையைப் பற்றி கால் மாக்ஸ் அவர்கள் கூறும்போது மனிதகுலத்திற்காக வாழ்நாளில் பெரும்பாலும் சேவை செய்வதற்கான வழியில் நமது வாழ்க்கையில் ஒரு நல்வாய்ப்பு நிலையை நாம் தேர்ந்தெடுத்து ஏற்பாடு செய்துகொண்டால் எத்தகைய சுமைகளும் பளுக்களும் நம்மை எதுவும்செய்துவிடமுடியாது, பணியவைத்துவிடமுடியாது" ஒரு வாழ்க்கைத் தொழிலைத் தேர்ந்தெடுப்பது என்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில் அதுதான் அவன் மனித குலத்திற்காக பணியாற்றுவதில் சிறந்த வாய்ப்பைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும் என எடுத்துக் காட்டியிருப்பது இங்கு நோக்கத் தக்கதாகும். மகாத்மாகாந்தி, அன்னைதெரேசா, படிக்காதமேதை காமராஜர் என பலர் உலகப் புகழ்பெற்றதும் இன்னும் பலர் உலக அரங்கில் விருதுகள் பெற்றுக்கொண்டிருப்பதும் இந்த சமூகசேவையின் உன்னதத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

எனவே நாம் எமது வாழ்நாளினை பயனுடையதாக வளம் நிறைந்ததாக மாற்றிக்கொள்வதற்கு சமூகசேவையினை துணைக்கொள்ள வேண்டும். முயற்சி என்னும் சக்தியால் சேவை என்னும் சிறகினை விரித்து சோதனைகளை, சாதனைகளாக்கி இமயம் போல் மாற்றி சேவையில் உயர்ந்து தன்னிறைவு சமுதாயத்தினை உருவாக்கும் உலகச் சூரியனாய் மிளிர்வோம்.

**வாழ்க சமூகசேவை!**
**வளர்க சமூக சேவை!!**

**- இராசரத்தினம் சத்தியேஸ்வரன்**
*மயிலங்காடு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தை நோக்கி ஒரு பார்வை

**போர்**மேகங்கள் சூழ்ந்துவிட்டன. குண்டுகள் இடியாய் ஒலிக்கின்றன. குருதி மழை பொழிகிறது. மக்கள் மழையிலே நிலை தடுமாறித் தத் தளிக்கின்றார்கள். உலகமே போர் மயம் பூமியே இரத்தக்கறை படிந்து விட்டது. பூமி கொத்தளிக்கும் கடலாய் அமைதியற்று ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கிறது.

சூரியனைக் கண்ட பனித்துளியாய் மறைந்துவிட்ட சமாதானம். அது இன்று விலைபேசும் கடைச்சரக்காய்ப் போய்விட்டது. ஆனால் ஒருவரால் தானும் அதனை வாங்க முடியவதில்லையே. காரணம் அது கற்பனைக் கெட்டாத பெறுமதியாய்ப் போய்விட்டது.

இன்று உலகமே பிளவுபட்டுவிட்டது. பல்வேறு இனங்கள் பல்வேறு தேசியங்கள் பல்வேறு நாடுகள் அவற்றுக்குள்ளேயும் எத்தனை பிரி வினைகள் இனவாதம் மொழிவாதம் மதவாதம் எனப்பல தலை விரித்தாடும் இக்காலகட்டத்தில் சமாதானம் எங்கோ ஓடி மறைந்துவிட்டது.

இன்று பலர் சமாதானம் என்று ஏதோ கூறுகின்றனர். ஆனால் சமாதானம் என்றால் என்ன என்பதை ஒருவரும் உணர்வதில்லை. ஒரு சிறிய சமூக அலகு தமக்குள்ளே சகிப்புத்தன்மையுடனும் புரிந்துணர்வுட னும் வாழ்வதே சமாதானம் ஆகும். குடும்பத்தில்வளர்க்கப்படும் சமா தானம் சமூகத்திற்கும் பின்னர் இனத்திற்கும் தேசியத்திற்கும் நாட்டிற்கும் இறுதியில் உலகத்திற்குமாக மிளிர்கின்றது. இவ்வாறு தோன்றும் சமாதா னமே உண்மையிற் சமாதானமாக கருதப்படுகின்றது.

ஆனால் இவ்வாறு ஒரு உலக சமாதானத்தைக் கட்டியெழுப்புவது நடைமுறையில் சாத்தியமாகாத ஒன்றாகப் போய்விட்டது. காரணம் மக்கள் இனம், மதம், மொழி என்ற போர்வையில் மக்கள் ஒற்றுமையாகச் செயற்படாமையேயாகும். உலகத்தில் வாழும் ஒவ்வொருவரையும் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பமாக நினைத்துவிட்டோமாயின். சமாதானம் வெகுதூரத்திலில்லை எம் அயலவர்களை எமது தாயாகவும் தந்தையாகவும் சகோதரர் களாகவும் நினைத்து அவர்களுடன் பழகவேண்டும். ஒவ்வொருவரினதும் இன்பத்தில் மட்டும் பங்குகொள்ளாது துன்பத்தைக் கண்டு துவள் கின்றவேளையிலும் கூடக் கைகொடுக்க வேண்டும். நான் வாழ்ந்தால் மட்டும்போதும் என்ற குறுகிய வட்டத்தினுள் இல்லாமல் பிறரையும் வாழவைக்க வேண்டும் என்ற பரந்த நோக்கிற் செயற்படவேண்டும். இவ்வாறு ஒரு சிறந்த சமூகம் கட்டியெழுப்பப் பட்டால் அது சமாதானத் திற்கு வித்திடும்.

இவ்வாறு நாட்டிற்குள் புகும் சமாதானம் பல்வேறு சவால்களை எதிர்நோக்குகின்றது. இனப்பிரச்சினையால் பயங்கரவாதம் என்ற பேய் என்று பல நாடுகளில் தலைவிரித்தாடுகின்றது. சட்டத்தின் முன்னி லையில் அனைவரும் சமம் என்பதை மறந்து பெரும்பான்மை இனமாகிய தானே ஆட்சி அதிகாரம் முழுவதையும் வைத்திருக்கவேண்டும். தனக்குக் கீழேயே எல்லாம் பிரதேசங்களும் ஆட்சி செய்யப்படவேண்டும் என்று கருதுகிறார்கள். ஆனால் சிறுபான்மையினரோ அதற்குத் தலை சாய்ப் பவராக இல்லை. தமக்குத் தனிநாடு கோருகிறார்கள். ஒருவரும் விட்டுக் கொடுப்பதாய் இல்லை. இவ்வாறாக நாட்டுக்குள்ளேயே போர், ஒரு நாட்டுக்குள்ளேயே சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு வழி நாட்டின் அனைத்து மக்களிற்கும் சமமாக அடிப்படை உரிமைகளை வழங்கு வதேயாகும்.

இவ்வாறு நாட்டிலே சமாதானம் உருவாக்கப்பட்டாலும் உலக மக்கள் அனைவரும் எதிர்நோக்கும் பெரிய சவால் அணுகுண்டுகளேயாகும். அணுப்பரிசோதனை என்ற நோக்கில் அணுகுண்டுகளை எல்லா நாடுகளும் உற்பத்திசெய்கின்றன. அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, பாகிஸ்தான், இந்தியா... அப்பப்பா! பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். இவையாவும் அணுகுண்டைத் தயாரித்து வைத்துக்கொண்டு பல நாடுகளை வம்புக்கு இழுக்கின்றன. இரு நாடுகளுக்கும் சிறியதோர் பிரச்சினை வந்தால் போதும் ஒரு நாடு அணுகுண்டை எடுக்கிறேன் இதோ போடுகிறேன் என்று மற்றவனை மிரட்டுகின்றது. ஆனால் இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் அணுகுண்டைப் பயன்படுத்தவும் தயாராக இருக்கின்றன.

ஆனால் அவர்கள் பயன்படுத்திவிட்டனர். உலக வல்லரசாக அமெரிக்கா ஜப்பானுடனான சில சிறிய பிரச்சினைக்கு பழிவாங்கும் நோக்குடன் இரண்டாம் உலகப் போர்க்காலப் பகுதியில் இரு அணு குண்டுகளைப் போட்டது. அதனால் ஏற்பட்ட பாரிய அனர்த்தங்கள் என்றும் நிலைத்துவிட்டன. எத்தனை அழிவுகள் / உயிரிழப்புக்கள் / அங்கவீனர்கள். அணுகுண்டைப்போடும்போது அமெரிக்கா கூட இவ்வா றானதொரு அழிவை எதிர்பார்த்திருக்காது.

இவ்வாறான அழிவுகள் அன்று மட்டுமல்ல இன்றும் தொடருகின்றன. இவ்வாறு தொடரும் அழிவுகளை நிறுத்தவேண்டும். மக்கள் இன்று பழைய காட்டுமிராண்டிகளாகவே மாறிவிட்டனர். ஒருவனை ஒருவன் அழிப்பதாலே அவர்கள் வாழுகின்றனர். காரணம் அவர்கள் ஒருவரை யொருவர் புரிந்துகொள்ளாமையாகும். மக்களிடையே போட்டிகள் பொறாமை என்று பல தீய குணங்கள். இவ்வாறான உள்ளத்தில் எங்கே சமாதானம் தோன்றப்போகிறது?.

மலர்ந்துவிட்டது புத்தாயிரமாம் ஆண்டு. புத்தாயிரமாம் ஆண்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்ப பாடசாலைகளில் சமாதானக்கல்வி என்ற பாடத்திட்டம் நடைமுறையில் உள்ளது. பாடசாலையில் அவன் சமாதானத்தை வளர்த்தானாயின் பின்னர் தான் புகும் சமூகத்திலும் சமாதானமாக வாழ்வான்.

2004ஆம் ஆண்டில் உலக மக்கள் அனைவரினதும் எதிர்பார்ப்பு உலக சமாதானமே. இந்த அடைவினை எட்டவேண்டுமாயின் மக்களே நீங்கள் உங்களிடையே சமத்துவம்இ சகிப்புத்தன்மை சகோதரத்துவத்தை வளருங்கள் இந்த நூற்றாண்டிலே போர் என்ற அரக்கனை ஒழித்து சமாதானம் என்ற தேவதையை ஒளிபரப்ப விடுங்கள். வானத் திலே வெண்புறா சமாதானப்புறாவாய்ச் சிறகடித்துப் பறக்கட்டும்.

**- ப.தயாழினி**

*இணுவில் கலாஜோதி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியின் குணம்

இளமையை
இருட்டறைக்குள்
இறுகவைக்கும்
மதியை
மரியாதையின்றி
மலையேற வைக்கும்
விதியை
வீதியிலே
வியாபாரம் செய்யும்
கடமைகளில்
மடைமையாக்கி
திறமைகளை
தீர்த்துக்கட்டும்
தோழமையைத்
தூக்கி எறிந்து...
துன்பமே சுழன்று வரும்
குடி என்பது - குண்டுவெடி
உடலுக்கு இது நல்லதல்ல.

**தே. தர்சினி**
*சிந்திப்பந்தல்*
*இளவாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனத்தொகை அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்

நீர் சூழ்ந்த இப்பிரபஞ்சத்திலே மனிதனுடைய வளர்ச்சி, விவேகம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக அதிகரித்துச் செல் கின்றது. விலங்கோடு விலங்காய் வாழ்ந்த மனிதன் காலப்போக்கில் தனித்துவாழத் தொடங்கினான். இப்படியாகப் பல்வேறு இடங்களில் வாழ்ந்த மனிதன் நாகரிக வாழ்விலே திளைக்கத் தொடங்கி பெருந் தொகையான மக்களாக உருவெடுத்தான்.

ஆதி மனிதன் மொழி தெரியாது , வழி தெரியாது காடுகளிலே பறவை விலங்கு என்பவற்றுடன் இயற்கையில் இருக்கின்ற உணவு களைப் பெற்றும் , காலப்போக்கில் வேட்டையாடியும் சமிக்ஞைகளை வளர்த்தும் வாழ்ந்து வந்தான். அவனுடைய வேலையேதோ ஒருவகை யில் மூளையைச் சிந்திக்க வைத்தது. உடலில் மாற்றங்கள் நிகழ்ந்தன. சமிக்ஞைகள் மொழியாகப் பிறந்தன. விலங்குகள், காடுகள் என்பனவற்றி லிருந்து பிரிந்து ஆற்றங்கரையோரங்களை நோக்கி நிலையான இருப் பிடத்தை வித்திட்டான்.

ஆற்றங்கரையோரக் குடியிருப்புக்களில் விவசாயத்துடன் தான் கண்ட நெருப்பு, சக்கரம் என்பவற்றுடன் விஞ்ஞானம் தளைக்கத் தொடங்கியது. அவனது சனத்தொகைப் பெருக்கம் காரணமாக உணவு வளர்ச்சியும் பெருகிக்கொண்டது. காடுகளை அழித்துச் சேனைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளத் தொடங்கினான். கட்டிடம் அமைத்தல், பாதைகள் அமைத்தல், கைத்தொழிற்சாலைகளை அமைத்தல் என்ப வற்றில் மாற்றங்கள் நிகழத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூற்றாண்டிலே இயந்திர யுகமும் அவசர கதியும் உருவாக அன்றைய நெருப்பும் சுழல்ச் சக்கரம். இன்றைய அவசர கதிக்கு ஈடினை அற்றதாகத் திகழ்கின்றது. சனத்தொகைப் பெருக்கத்தினால் இயந்திய யுகமாக மாறிவிட்டது. விரிந்து பரந்த உலகை அடக்கி ஆளும் அளவுக்கு மானிடம் தளைத்துவிட்டது. இதற்கு விஞ்ஞானமே காரணமாகும். மொழிப் பயன்பாடும் கருவிக் கையாட்சியும் மனித வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. விலங்கு நடத்தையிலிருந்து வேகமாக விலகியதால் வானத்தையும் பூமியையும் நெருப்பில் கலந்த அனல்போல மனிதன் பின்னிப்பிணைந்து நடக்கின்றான்.

போக்குவரத்துத்துறையை நோக்கினால் கால்நடையாகப் பயணித்த மனிதர்கள் ஆரம்பத்தில் மாட்டுவண்டியிலும் பின்னர் துவிச்சக்கர வண்டி,அதிவேக விமானம், செயற்கைக் கோள்கள் எனப்பல சாதனங்கள்/ பொறிகள் என உருவாக்கிப் போக்குவரத்தில் பாரிய முன்னேற்றங்களை உருவாக்கினான். இன்று பாரிய இயந்திரங்களைக் கொண்டு தயாரிக்கப் பட்ட புகையிரதங்கள், மின்காந்த அலைகளால் அதிவேகமாக இயங்கும் அளவுக்கு ஜப்பானின் கைத்தொழில் முன்னேறியுள்ளது.

அன்றைய மனிதர்கள் சிறுநோய்களுக்கும், பாரிய நோய்களுக்கும் இறைவனை நம்பினார்கள். இன்று மனிதன் அணுக்கதிர்கள் மூலமே சத்திரசிகிச்சைகள் செய்வதோடு , இழந்த உறுப்புக்களைப் பொருத்தவும், குளோனிங்முறை மூலம் செயற்கையாக விலங்குகளை உருவாக்கும் முறையையும் கண்டுபிடித்துவிட்டான். இறப்பை அறியாத பூமியாக வாழ்நிலத்தை மாற்றுவதற்கு மனிதன் தீவிரமாக முயற்சி செய்கின்றான்.

விவசாயத்துறையில் இன்று கனகரக இயந்திரங்களும், பல்வேறு கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. உழுதல், விதைத்தல், களை யெடுத்தல், எரு இடல், நீர் இறைத்தல் எல்லாமே இயந்திரமாக மாறிவிட்டது. பயிர்வகைகளின் நோய்களைப் பாகுபடுத்தி, ஏற்ற மருந்து கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒட்டுதல், இழையவளர்ப்புப் போன்றவற் றால் பல்லாயிரக்கணக்கான தாவரங்கள் உருவாக்கப் படுகின்றன. செயற்கை முறையில் பூத்தல், காய்த்தல் என விருத்தி நிலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் ஓமோன்களால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இத்தகைய வளர்ச்சியினால் சனத்தொகைப் பெருக்கத்திற்கு ஈடு இணையாக குறைந்த காலத்தில் கூடியளவு உற்பத்தி செய்யக்கூடியதாக விஞ்ஞான வளர்ச்சியும் கைத்தொழிற்துறையும் , இயந்திர சாதனங்களும் , மனித உழைப்பும் உதவும் கரங்களாகத் திகழ்கின்றன. விஞ்ஞானத்தைக் கைப்பற்றியபடி விவசாயம் வீறுநடை போடுகின்றது.

மின்சாரம் வந்தமையால் அபிவிருத்தியில் மாற்றம் ஏற்பட்டு வானொலி, தொலைக்காட்சி, தொலைநகல், மின்னடுப்பு, மின்னழுத்தி, குளிர்சாதனப்பெட்டி, இணையம், மின்னஞ்சல் என மின்னியல் சாதனங்களின் பட்டியல் நீளுகின்றது. இதனால் எந்த வேலைக்கும் தேவையான வலுவும் நேரமும் குறைக்கப்பட்டுள்ளன. அத்தோடு அழகுணர்ச்சிகள், நுட்பக்கலைகள், நாகரிகம் என்பன வளர்ச்சி கண்டுள்ளது. பாரிய மாடிக்கட்டடங்களில் வசிப்பவர்களுக்கு மின்சாரம் உயிர் மருந்தாகும். மேலும் கணனிப் பயன்பாடு மனிதனைக் கட்டுப்படுத்தும் அளவுக்கு கல்வி, தொழில்நுட்பம், சுகாதாரம் போன்ற துறைகளிலே ஆதிக்கம் செலுத்துகின்றன. இது அபிவிருத்தியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

ஆரம்ப கடற்றொழில் கூடை, தூண்டில், வீச்சுவலை என கரையோரங்களில் நிகழ்ந்தது. தற்போது இயந்திர கண்டுபிடிப்பு வளர்ச்சி காரணமாகப் பாரிய கப்பல்கள், ஆழ்கடல் ஆழிகள், குளிர்சாதனப் பெட்டிகள், வெடிமருந்துகள் என்பன பயன்படுத்தி பெருந்தொகையான கடல் செல்வங்களை நீண்ட நாட்கள் தங்கியிருந்து பெற்று தன் நாட்டுக்கு உணவைப் பெறுவதோடு பிற உயிரினங்களுக்கும் உணவு பெறும் வழியை மனிதன் அறிவாற்றலால் உருவாக்கியுள்ளான். அத்தோடு கடல் போக்குவரத்தின் வெற்றிக்கு மனிதன் கண்டுபிடித்த அதிவேக படகுகளும் இயற்திரமுமே காரணமாகும்.

உலகின் பல பாகங்களிலும் உள்ள மக்கள் தொலைத்தொடர்புகளால் ஒன்றினைக்கப்பட்டுள்ளனர். ஆரம்பத்தில் அச்சு இயந்திர கண்டுபிடிப்பானது பத்திரிகைக்கு வித்திட்டது. வானொலியும் தொலைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியும் 20ம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப்பட்டன. இன்று இணையம், தொலைநகல் என்பன உடனுக்குடன் செய்திகளைப் பரிமாற உதவு கின்றது. இணையம் ஆனது உலகையே ஓர் வலைப்பின்னலுக்குள் வைத்து தகவல்களை தருகின்ற அளவுக்கு உலகம் குறுகிவிட்டது. அத்தோடு நாட்டைச் சிறந்த முறையில் பாதுகாப்பதற்கு உலகின் கண்டுபிடிப்புக்கள் பல்வேறு வகைகளிலே உதவுகின்றன.

இத்தகைய மனிதனது பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக உலகளாவிய ரீதியிலே சூழலுக்குப் பெரும் பாதிப்புக்கள் நிகழ்கின்றது. பூமியிலே பாரிய வெப்பம் உருவாக்கிவிடும் நிலைமையையும் ஏற்படுத்து கின்றது. இதனால் பூமி பேராபத்தை எதிர் நோக்குகின்றது. இந்நிகழ் வானது நிலம், நீர், காற்று, ஆகாயம் என்பவற்றில் பாதிப்பை உண்டு பண்ணுவதுடன் ஒலி ஒளியுடன் அதிவேக சக்திகளும் சூழலைப் பாதிக்கின்றன.

அதிகளவு செயற்கை உரம் கிருமிநாசினிகளை பாவிப்பதால் நிலம் மாசடைகின்றது. மண்ணின் இயற்கைத்தன்மை பாதிப்படைகின்றது. இதனால் பயிர்ச்செய்கைக்கு நிலம் பொருத்தமற்றதாகின்றது. நிலத்தி லுள்ள இரசாயனப் பொருட்கள் மழை நீருடன் கரைந்து நிலக்கீழ் நீரை மாசடையச் செய்கின்றது. அத்தோடு நீர்நிலைகளில் அல்கா மூடுபடை தோன்றுகின்றது. இதனால் இயற்கை வட்டம் பெருமளவு பாதிப்படைகின்றது.மேலும், இவற்றால் பெருமளவு தொற்றுநோய்கள் ஏற்படுகின்றன. அத்தோடு வளி மண்டலத்தில் காபனீரொட்சைட்டு அதிகரிப்பு சூழல் வெப்பநிலையை அதிகரிக்கச்செய்கின்றது. இதனால் இயற்கைச்சமநிலை குழப்பமடைகின்றது.

உணவுத்தேவைக்கான உற்பத்திகள் தொழிற்சாலைகளில் நிகழ் வதனால் தொழிற்சாலைக் கழிவுகள் பதம் கெட்ட நீர் பேன்றவை நீர் நிலைகளை அடைவதனால், அந்நீரில் வாழும் உயிரினங்கள் இறக்க நேரிடுகின்றன அத்தோடு அழுக்கு நீர் நன்னீரிலும், கடல்நீரிலும் கரை யாது இருப்பதால் நீர்வாழ் அங்கிகள் பாதிக்கப்படுகின்றன. அத்தோடு நீருக்கடியில் அணுகுண்டு பரிசோதனைகள் நடத்துவதால் நீர் நிலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர் வீச்சுக்களால் மாசடைகின்றன. பாரிய கப்பல்களின் எண்ணெய் கசிவுகள் நீர் மேற்பரப்பில் படையாக மிதப்பதனால் ஒலியும் வளியும் செல்லத்தடையாக இருக்கிறது. இதனால் சூரிய ஒளியை நம்பியிருக்கும் பிளாந்தன் தாவரங்கள் இறக்கின்றன. இரசம், செம்பு முதலிய பார உலோகங்கள் கடலுணவினூடாக உட்கொள்ளும் மனிதனை சென்றடை கின்றது. இது மனித இனத்திற்கு தீங்கு விளைவிக்கின்றது.

தொழிற்சாலைக் கழிவுகளினால் வளிமாசடைகின்றது. தொழிற்சாலை யிலிருந்து வெளியேறும் நச்சுத்தன்மையுள்ள வாயுக்களை மனிதன் சுவாசிப்பதால் மனிதனுக்கு சுவாசத்தொகுதி நோய் ஏற்படுகின்றது. கதிரியக்க பரிசோதனைகளால் அதீத சக்தி வாய்ந்த கதிர்கள் வளி மண்டலத்தை அடைகின்றன. விண்வெளிப் பயணங்கள் மக்களின் போக்குவரத்து விமானங்கள், ஏவுகணைப் பயன்பாட்டின் போது வெளி விடப்படும் புகை வளிமண்ணடலத்தை மாசுபடுத்துகின்றது. இதனாலும் குளோரோ புளோரோ காபன் செயற்பாட்டினாலும் ஓசோன் படையில் ஓட்டை ஏற்படுகின்றது. பிறஊதா நச்சுக் கதிர்கள் பூமியிலுள்ள மனிதனை தாக்குகின்றன.

இன்றைய உலகின் சனத்தொகைப் பெருக்கம் மனித தேவைகளை அதிகரிக்கச் செய்தால் காடழிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இதனால் அமிழமழை ஏற்பட்டு துருவ பனிக்கட்டி நிலப்பரப்பை விழுங்கிவிடும். மனிதன் இந்த மாறுதலைத் தவிர்க்க இரசாயனப் பொருட்களைக் குறைத்து இயற்கை வளமாக்கிகளைப் பயன்படுத்தி சுகாதார பாதுகாப் பிற்கேற்ப தொழிற்சாலைக் கழிவுகளை வெளியேற்றி இயந்திர சாதனங் களைக் குறைத்து தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் மக்களுக்கு அறிவுரை கூறி ஒவ்வொரு மனிதனும் உயிர்நாடியான மரங்களை நாட்டி இப்பூமியை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டும். சோலைவனம் பாலைவனமாவதை தடுக்க வேண்டும்.

**ந.சத்தியா தமிழரசன்**
*சபாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம் தெற்கு.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சமூகப் பெறுமானம்

மனிதன் சமூகத்தில் இசைந்து, இணைந்து வாழக்கூடிய பண்புடையவன். சமூகப் பண்பாடு மனிதப் பண்பாட்டின் உயர்மட்ட நாகரிகமாக கருதப் படுகின்றது. மனித இனத்தின் பரிணாம வளர்ச்சி, அதற்கூடான சமூக வளர்ச்சி என்பன நாகரிக உலகத்தைத் தோற்றுவித்தன. மனிதன் சமூகத் தில் வாழ்வதற்கு சகிப்புத்தன்மை, எளிமை இரண்டும் முதன்மை பெறுகின்றன. அவனது சிந்தனையும் அறிவும் ஆற்றலும் செயற்திறன் மிக்க மனப்பாங்குகளும் உயரிய குறிகோளை நோக்கியதாக அமைய வேண்டும். அத்தகைய உயரிய குறிக்கோளை எட்டுவதற்கு சாந்தம், வாய்மை, உள்ளத்து நேர்மை, ஒத்துழைப்பு, தாராள மனப்பான்மை, அழகுணர்வு கட்டுப்பாடு போன்ற பல்வேறு பண்புகளை உள்ளத்தே வளர்த்துக்கொள்ள வேண்டும். மனிதனில் மனிதப் பண்புகள் கல்விக் கூடாகவே வளர்ச்சியடைந்து வருகின்றன. உளவிருத்தியே பண்பாட்டு விருத்திக்கு அடித்தளமாகின்றது. உளவளர்ச்சியில் கல்வியின் பெறு மானம் முக்கியத்துவப்படுகிறது. உளம் பண்பாக வளர்ச்சியடையும் போது மனிதனிடம் அமைதியும், நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்படுகின்றது.

மனித நலனுக்கும் வாழ்க்கை முறைக்குமிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதில் சமயம் நீண்டகாலப் பங்களிப்பை வழங்கி யுள்ளது.சமூகத்தின் பாரம்பரிய விழுமியங்கள் தொடர்பை வழங்கியுள்ளது. சமூகத்தின் பாரம்பரிய விழுமியங்கள் யாவும் கலாச்சார பாரம்பரியங் களிற்கு ஏற்ப பேணப்பட்டு வந்துள்ளன. எளிமை, நேர்மை, சிக்கனவாழ்வு என்பன ஒரு காலத்தில் மனிதப் பண்புகளாகப் பேணப்பட்டு மதிக்கபட்டு வந்துள்ளன.

கல்வியினூடாக விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வேகமாக வளர்ச்சியடைந்தபோது சமூகச் செயற்பாடுகள் திறக்கப்பட்டு தொடர் பாடல் விரிவடையத்தொடங்கியது. பல்தேசிய சமூகச் செயற்பாடுகள் மனித வாழ்வில் உட்புகுந்தன. பல்தேசிய சமூகக் கருத்துக்கள் கலப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டபோது கலாச்சாரச் சீரழிவு ஏற்படத்தொடங்கியது. மனித செயற்பாடுகள் இயந்திரமயமாகின. மனித சிந்தனையின் அறிவாற்றல் செயல்திறன்கள் புதிய உலகைக் கட்டியெழுப்புவதிலும் அதற்கப்பால் அடுத்த உலகத்தைப் பற்றியதாகவும் வளர்ச்சியடையத் தொடங்கின இதற்கமைய கல்விச் செயற்பாடுகளிலும் மாற்றம் கொண்டுவரப்பட்டன. பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஏகாதிபத்திய சர்வாதி காரப் போக்கு தோற்றம் பெற்றது. சமூகக்கட்டமைப்பில் மேலமைந்த மட்டம் கீழ் அமைந்த மட்டத்தை சுரண்டத் தொடங்கியது. மனிதப் பண்புகள், சமூக விழுமியங்கள் செயலிழக்க, சமூகம் நிம்மதியிழக்கத் தொடங்கியது. மனிதப் பண்புகள் சமூக விழுமியங்கள் மறைந்துகொண்டு வருகின்றன என இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியது இங்கு நினைவுகூரத்தக்கது.

மனிதப் பண்புகள் இன்று மதிக்கப்படவில்லை. கல்வியின் சமூகப் பெறுமானங்கள் தேய்வடைந்து வந்துள்ளமை ஆரோக்கியமான விடயமாகக் கொள்ள முடியாது. கல்வி, சமூகத்தை நோக்கியதாக அமையவேண்டும் என்ற நிலை மாறியுள்ளது. கல்வி அபரிமித வளர்ச்சி யடைந்துள்ளது. நாகரிக உலகு தோற்றம் பெற்றுள்ளது. ஆனால் சமூகத்தில் வறுமை, போசாக்கின்மை, குடும்பத்தலைவனை இழந்த பெண்கள், அநாதைச் சிறுவர்கள், பாலியல் வன்முறைகள், இளைஞர் அமைதியின்மை, வேலையின்மை போன்ற சமூகச் சீர்கேடுகள் அதிகரித் துள்ளன. இந்த அதிகரிப்புக்குக் கல்வி நேர்முகமாகவும் மறைமுக மாகவும் காரணமாக அமைந்துள்ளது. ஒரு காலத்தில் எளிமையாக வாழ்ந்த சமூகம் இன்று ஒரு புறத்தில் ஆடம்பரமான விழாக்கள், வைபவங்களை நடத்துகின்றது. இதற்காகச் செலவிடப்படும் பணம் ஏராளம். ஆனால் மறுபுறத்தில் சமூகச் சீர்கேடுகள் மலிந்து காணப்படு கின்றன.

சமூகத்தின் அங்கத்தவர் அனைவரும் சிந்திக்க வேண்டும். கல்விச் சிந்தனையை வளர்க்க வேண்டும். மூத்தோர், மதகுருமார், கற்றோர் சமூகத்தில் இணைந்து தீர்வு காணவேண்டும். சமூகச்சீர்கேடுகளைக் களைய ஆக்கபூர்வமான சிந்தனை தேவை. இந்தச் சிந்தனையைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டக்கூடிய வகையில் கல்விச் செயற்பாடுகள் அமைய வேண்டும். இதில் ஆசிரியர்களின் பொறுப்பு மிக முக்கியமானது. ஆசிரியர்கள் தம்மைப்பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டும் தம் கடமையை உணர வேண்டும். கல்விக்கூடாக நல்ல மனப்பாங்கினை வளர்க்க வேண்டும். மனித உளம் பண்படையக்கூடிய விதத்தில் கல்வியூட்ட வேண்டும்.

சமூக விருத்தியில் பெண்களின் பங்கு அளப்பரியது. சமூக கலாச் சரத்தை பேணுவதில் மிகப் பெரும்பங்கு அவர்களிற்குண்டு. நீரைப் பாதுகாத்தல், உணவு பகிர்தல், முதியோரைப் பாதுகாத்தல் விருந்தோம்பல், அன்பு, கருணை, சாந்தம் தியாகம், நீதி போன்றவற்றில் உள்ளுணர்வு முன்மாதிரியாக செயற்பட வேண்டும். தாயைப் போல் பிள்ளை என்பதற் கிணங்க பின்பற்றல் மூலம் அடுத்த தலைமுறை சமூகவிருத்தியில் பொறுப்புணர்வுடன் செயற்பட இது வழிவகுக்கும். குடும்பம் பிள்ளையின் முதலாவது கற்றல் இடம். இங்கு பிள்ளை நல்ல மனப்பாங்கினைப் பெற வகை செய்வதில் பெண்களின் பங்கு முக்கியமானது.

அடுத்த கற்றல் நிலையம் பாடசாலை. பாடசாலை ஒரு சமூக நிறுவனம். இங்கு சமூகத்தை நோக்கிய மனிதப் பண்புகளை விருத்தி செய்யும் வடிவத்தில் கல்வி வழங்கவேண்டும். கல்வி, உணர்வு பூர்வமாக இருக்க வேண்டும். சமூகப் பெறுமானத்தை நிர்ணயிக்கும் கல்வியை அறிந்து வழங்கும் மிகப்பெரிய சமூகக் கடமையை ஆசிரியர் உள்ளு ணர்வுடன் தியாகவழி நின்று பொறுப்புடன் ஆற்றுவதன் மூலம் கல்வி அர்த்தமுள்ளதாக்கப்படுகின்றது. கல்வி சமூகத்தேவையை நிறைவு செய்கின்றது. கல்வியின் சமூகப் பெறுமானம் தெளிந்த நீரோடை போன்ற நிம்மதியான மகிழ்ச்சிகரமான வாழ்க்கையின் சுதந்திரக் காற்றாகும்.

நன்றி.

**த. பிரியதர்சினி**

*ஆசிரியை*

*யா/ஊர்.புனித மரியாள் பெண்கள் பாடசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் விழிப்புணர்வு

எமது பிரதேசத்தில் வாழ்ந்த முன்னோர்கள் சூழலுடன் இயைபுபட்டே தமது வாழ்வை மேற்கொண்டு வந்துள்ளனர். அப்போது அவர்கள் இயற்கையை பெரிதும் போற்றினார்கள். நாகரிக மனிதன் தனது அறிவாற்றலால் சூழலை ஆக்கிரமித்து சூழலிலுள்ளவற்றை தனக்காகப் பயன்படுத்தி, அபிவிருத்தி என்ற போர்வைக்குள் பல அனர்த்தங்களை ஏற்படுத்திவிட்டான். இன்று தான் வாழும் சூழலில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து, அவற்றை எவ்வழிகளில் பேணமுடியும் என யோசிக்கின்றான். ஆனாலும் சூழல் பற்றிய ஒவ்வொரு விடயங்களிலும் கூர்ந்த அறிவு இன்றைய நிலையில் பலருக்கில்லை. பௌதிகச் சூழல் நிலைமைகள் பற்றியோ, அவற்றில் மனித செயற்பாடுகளால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றியோ உணரக்கூடிய நிலையில் பலர் இல்லை. எமது கல்வித்திட்டங்களும் நாம் வாழும் சூழலை முக்கியப் படுத்துவதாக அறியவில்லை. இளஞ்சந்ததியினருக்கு எமது சூழலில் என்ன நடைபெறுகிறதென்று பெரிதாக தெரிய வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. திட்டமிடல், அபிவிருத்தி போன்ற துறைகளில் ஈடுபடுவோர் சூழல் விடயங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் போதுமானதாக இல்லை. மேற்கொள்ளப்படும் திட்டங்களில் **(Projects)** சூழல் தாக்க மதிப்பீடுகள் **(Environmenatal infect Assessment)** முக்கியத்துவம் பெறுவதில்லை. செய்யும் அல்லது செய்யப்படும் திட்டங்களினால் சூழலுக்கும், மக்களுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து எவரும் கவலை கொள்வதாக இல்லை. மக்களும் தாம் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளும் எவ்விதத்தில் சூழலைப் பாதிக்கின்றது என்பது பற்றி உணர்ந்து கொள்வதாகவும் இல்லை. இந்நிலையில் எமது பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட யுத்த அனர்த்தங்கள் பாரிய சூழற் தாக்கங்களை ஏற்படுத்திவிட்டன. யுத்த விளைவுகளைத் தொடர்ந்தும் நாம் அனுபவித்து வருகின்றோம். எமது சூழலில் அளவுப்பிரமாணமின்றி நச்சுப்பதார்த்தங்கள் கலந்துவிட்டன. மண்ணிலும், நீரிலும் காற்றிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு நச்சுப்பதார்த்தங்கள் கலந்துள்ளன. என்பதுபற்றி இதுவரை ஆய்வுசெய்யவில்லை. மேலும், யுத்தம் ஏற்படுமோ என்ற அச்சம் மத்தியில் வாழும் மனிதர்களுக்கு சூழல்பற்றியோ, சூழல் பாதுகாப்பு பற்றியோ எதிர்கால சந்ததியினர் இங்கு வாழவேண்டும் என்ற தூரநோக்கமோ இருப்பதாகத் தெரியவில்லை. இந்நிலையில் சூழல் பற்றிய பாதுகாப்பை யாரோ ஒருவர் செய்துதரவேண்டும் என்றும் நாம் அதில் சுகமாக வாழவேண்டும் என்ற மனநிலையிலுமே தாம் வாழும் ஆபத்தான சூழ்நிலையை அறியாமல் இங்கு மனிதன் என்று கூறும் உயிரினம் வாழ்ந்துகொண்டிருக்கிறது. எனவே, சூழல் பற்றிய சகலவிடயங்களிலும் தாக்கமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் அவசியமாகிறது.

## ஆறும் ஐந்தும்

ஈருருளிப் பயணம் வெய்யிலினூடே
களைத்துவந்து திண்ணையில் சரிந்தேன்.
அடுத்த வீட்டில் ஐயோ எனும் சத்தம்.
காதை அங்கால் தூக்கி வீசினேன்.
அடிதடி வசையென அடுக்காய் நடந்தது.
அப்பாவும் அம்மாவும், தம்பியும் அண்ணனும்
அக்காலும் தங்கையும் மோதிக்கொண்டனர்.
அன்பு அங்கே அலங்கோலமானது.
துடித்தெழுந்து மனிதத்தை உசுப்பினேன்.
மரணித்த காலம் நீண்டதாய் உணர்கிறேன்.
திண்ணையில் சோர்ந்து எண்ணத்தில் சார்ந்தேன்.
'அம்பா' எனும் சத்தம் காதில் இனிக்க
ஐந்தும் ஆறும் ஒப்பீடானது.
ஆறே எனக்கு கேடாகப் பட்டது.
ஐந்தோடு மகிழ்ந்து ஐக்கியமானேன்.
பசுவின் அன்பில் பசுமையைக் கண்டேன்.
கொசுவின் கூட்டில் இனிமையைக் கண்டேன்.
காகமும் கூடியே கரையக் கண்டேன்.
உண்தலில் காதலின் மகிமையைக் கண்டேன்.
ஐந்தறிவில் அன்பின் ஏற்றத்தைக் கண்டேன்.
ஆறறிவில் பண்பின் சீற்றத்தைக் கண்டேன்.

**நக்கீரன்**

*இணுவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பியர் *(Beer)* குடித்தால் உடல் சூடு தணியுமா?

**பி**ராந்தி, விஸ்கி, ஜின் போன்று பியரும் ஒரு மதுப்பொருளே. அதிலும் போதைக்காக ஆல்கஹால் சேர்க்கப்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இன்றைய இளைஞர்கள் பலர் கல்லூரிகளில் படிக்கும்போது பியர் உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும் என்று நம்பி பியர் குடிக்கத்தொடங்குகின்றனர். பின்பு அது பிராந்தி, விஸ்கி எனப் பல மதுக்களை குடிக்கும் பழக்கமாக மாறிவிடுகிறது. இந்தக் குடிப்பழக்கம் ஒருவருடைய சிந்தனைத் திறனை இழக்கச் செய்து, மதுவுக்கு அடிமையாக்கி, எந்நேரமும் குடித்துக்கொண்டே இருக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் தருகிறது. இதனால் அவர்கள் நிரந்தரக் குடிகாரர்களாகி விடுகின்றார்கள்.

பியரில் அல்கஹோலின் அளவு குறைவு என்றாலும், இரண்டு அல்லது மூன்று பாட்டில் பியர் குடிக்கும் நிலையில் குவாட்டர் பிராந்தியில் உள்ள அளவுக்கு அல்கஹோல் உடலில் சேர்ந்துவிடும். எனவே, பியர் குடிப்பதும் கெடுதல்தான்.

சரி, பியர் மற்றும் இதர மதுக்களைக் குடித்தால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை இப்போது பார்ப்போம். பியரில் உள்ள கார்போஹைட்ரேட்டு காரணமாக பீர் குடிப்பவர்களுக்கு முதலில் உடல் பருமன் ஏற்படும். பியரில் உள்ள அல்கஹோல் காரணமாக இரைப்பை, கல்லீரல், கணையம் ஆகியவை பாதிக்கப்படும். இரைப்பையில் புண் ஏற்படும். கல்லீரல் வீங்கும். உணவு செரிமானம் குறையும். பசி குறையும். வாந்தி வருவது போன்று இருக்கும். வயிறு வலிக்கும். சாப்பிட இயலாது. இவ்வாறு கல்லீரல் வீங்கத்தொடங்கிய உடனேயே மருத்துவரிடம் வந்தால் மூன்று வார மருத்துவச் சிகிச்சையில் நோயைக் குணப்படுத்தி விடலாம். ஆனால், குடிப்பதை நிறுத்த வேண்டியது முக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லீரல் வீக்கத்தைப் பொருட்படுத்தாமல் குடித்துக்கொண்டே இருந்தால், ஒரு நிலையில் வீங்கிய கல்லீரல் சுருங்கத் தொடங்கிவிடும். இதற்குக் கல்லீரல் சுருக்கநோய் *(Cirrhosis Liver)* என்று பெயர். அப்போது வயிற்றில் நீர் கோத்து, வயிறு பானைபோல் வீங்கும். இதற்கு மகோதரம் *(Ascitis)* என்று பெயர். இந்த நோய் முற்றியநிலையில் இரத்தவாந்தி ஏற்படும். கல்லீரல் முழுவதமாகப் பாதித்துவிட்டால் மருத்துவச் சிகிச்சை எதுவும் இல்லை. மரணம்தான் முடிவு.

நன்றி
**'ஹெல்த்'**

# மது வகைகளில் அற்ககோலின் செறிவு

| மதுவகை | செறிவு |
|---|---|
| கள் - *Toddy* | 2 – 4% |
| பியர் - *Bear* | 4 – 6% |
| வைன் - *Wine* | 8 – 20% |
| சாராயம் - *Arrack* | 32 – 33% |
| விஸ்கி - *Whisky* | 37 – 40% |
| ஜின் - *Gin* | 37 – 40% |
| வொட்கா - *Vodka* | 37.5% |
| றம் - *Rum* | 40% |
| பிறண்டி - *Brandy* | 40% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியின் செயற்பாட்டு அறிக்கை

## சக்தி அமைப்பின் ஊர்காவற்றுறைப் பிரிவின் செயற்பாடுகள்

மேற்படி அமைப்பின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் 22.05.04 அன்று மயிலப்புலக்கிராமத்தில் சிரமதானப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் சக்தி அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர்.

05.06.04 அன்று பருத்தியடைப்பு கோட்டையடிக்கிராமத்தில் சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினமும் உலக சுற்றாடல் தினமும் நடாத்தப்பட்டது. இதற்கு பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு J.X. செல்வநாயகம் அவர்களும், ஏனைய சிறப்பு விருந்தினர்களும், போரூட் அமைப்பின் உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் அக்கிராமத்தைச் சேர்ந்தவர்களும், ஏனையவர்களுமாக சுமார் 200 பேர் கலந்துகொண்டனர்.

28.06.04 அன்று முடிப்பிள்ளையார் கோயிலடி வேலணை மேற்கில் சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்புதினம் கொண்டாடப்பட்டது. இதில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் திரு.ஆ.நந்த கோபாலன் அவர்களும், ஏனைய சிறப்பு விருந்தினர்களும், போரூட் அமைப்பு உத்தியோகத்தர்களும், சக்தி அமைப்பு உறுப்பினர்களும், அக்கிராம மக்களும் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இதில் 250 பேருக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*　　　　*　　　　*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி அமைப்பின் உடுவில் தெல்லிப்பளை பிரிவின் செயற்பாடுகள்

05.06.2004 அன்று சுன்னாகம் பொதுநூலக மேல்மாடியில் சக்தியின் புனரமைப்பு புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது.

வைகாசி 31ம் திகதி சர்வதேச புகைபொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சுன்னாகம் சக்தியில் மது, புகைத்தல் எதிர்ப்பு விளம்பரப் பலகை, திட்ட முகாமையாளரால் திரைநீக்கம் செய்யப்பட்டு சுன்னாகம் சந்தியில் இருந்து மத்தாலோடைவரை பல சங்கங்கள் சேர்ந்து நூற்றுக்கு மேலாக இளைஞர்கள், யுவதிகள், நலன்விரும்பிகள், சமூகப் பற்றாளர்கள் சைக்கிள் ஊர்வலமாகச் சென்று மத்தாலோடை கலை வாணி சனசமூக நிலையம் முன்றலில் விழிப்புணர்வு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் போரூட் யாழ்ப்பாணத் திட்டமுகாமையாளர் திரு.அன்ரர்ஸ் ஸ்ரேன்விக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

06.06.2004ஆம் திகதி சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இணுவில் அண்ணா சனசமூக நிலையத்தில் மக்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் "விதைப்பு" என்ற நாடகமும் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் மதுவிலிருந்து விடுபட்டவர்களுக்கான கௌரவிப்பும் முதன்மைச் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப் புக்களும் நடைபெற்றது. இதில் பல சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதி களும் உள்ளூர்க் கிராம மக்கள் உட்பட முன்னூறுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

26.06.2004 அன்று சக்தி அமைப்பின் தெல்லிப்பளை பிரதேச அங்கத்தவர்களால் உலக சூழல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு சிரமதான நிகழ்வு அளவெட்டி மத்திய மருந்தக வளாகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டதுடன் சூழல் பாதுகாப்பு வார நினைவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கன்றுகளும் நாட்டப்பட்டது. இறுதியில் சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கு அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. இதில் அளவெட்டிப் பிரதேச பொது சுகாதார அதிகாரி கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது.

22.07.2004 இணுவில் கலாஜோதி சனசமூக நிலையத்தில் கிராம மக்களுக்கான மது விலக்கல் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் நீங்கள் பேசாவிடில் இவர்கள் பேசுவார்கள் என்ற நாடகமும் திருந்தாத உள்ளங்கள் என்ற நாடகமும், கவிதைகள், பாடல்கள், பேச்சுக்கள் ஆகியன இடம்பெற்றன. இதில் இருநூறுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் கலந்துகொண்டனர்.

31.07.2004 தொடக்கம் 01.08.2004 திகதிகளில் இணுவில் மத்திய கல்லூரியில் சக்தி உறுப்பினர்களுக்கு நாடகமும் அரங்கியலும் என்ற பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. இதில் அரங்க செயற்பாட்டுக்குழு ஆரம்பிக்கப்பட்டது.

**இம் மலர் தொடர்பான தங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.**

## அனுப்பவேண்டிய முகவரி:

**இதழாசிரியர்,**
**சக்தி அமைப்பு,**
**போரூட் யாழ்.மேற்கு அலுவலகம்,**
**டச்சு றோட்,**
**சித்தன்கேணி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருந்தாத உள்ளங்கள் இருந்து என்ன இலாபம்

*ஆக்கியோன்:*

**அராலியூர் – நல்லதம்பி**

"மது ஒழிப்பும், பிரச்சார வீதி நாடகமும்."

***ஆரம்ப நிகழ்வு***

**நிகழ்வு (01)**

(இவ்வீதி நாடகத்தில் பங்குகொள்ளும் அனைத்துப் பாத்திரங்களும் இவர்களுடன் பின்னணி இசைக் கலைஞர்களும் ஒன்றிணைந்து குழு நிலைப்பாடல் பாடி நடனம் ஆடுவர்.)

**கும்மி ராகம்**

**பாடல்**

தன்னானே நாதினம் - தன்னானே - தன
தன்னானே நாதினம் தன்னானே.

வாருங்கள் வாருங்கள் தோழர்களே - ஒன்று
சேருங்கள் சேருங்கள் தோழர்களே.

*வாருங்கள்...... 3 முறை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை சேர்த்துச் சிறுமை ஆக்கும்
மதுவைப் போக்க வாருங்களே

*வாருங்கள்......*

சொந்த மனை மக்கள் சொந்தச்சுகம் உடல்
இந்த மதுவால் மிக அழிவாம் - உங்கள்
சந்ததி காத்திட வந்திடுங்கள் மதுச்
சங்கடம் போக்கியே வென்றிடுங்கள்

உடலைக் கெடுத்து உயிரைக் குடிக்கும்
மதுவைப் போக்க வாருங்களே

*தன்னானே..... 2 முறை*

வேர்வைகள் சிந்தியே வேலைகள் செய்துமே
வீட்டினைக் காத்திடப் பெற்ற பணம் - தினம்
ஊரூராய் சுற்றிநீர் உண்ணும் மதுவால்
உன் மனை பட்டினி கொள்ளலாமா?

உறவைப் பிரித்து உணர்வை அழிக்கும்
மதுவைப் போக்க வாருங்களே

*வாருங்கள்......*

காலை எழுந்ததும் சேலைத் தலைப்பினை
நாலு பிள்ளைகள் பற்றி ஆழ - சிறு
கூழைக் கொடுக்கவும் ஏழைப் பெண் ஏலாது
எங்கித் தவிப்பதை எண்ணி நீ பார்.

ஏழ்மை நீக்கி வாழ்வை தூக்க
மதுவை போக்க வாருங்களே.

*தன்னானே...... 2 முறை*

பள்ளி செல்லும் பிள்ளை பாதிவழி தன்னில்
பஞ்சம் பசியினால் நொந்து விழ - அங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளித் திரியும் செல்வந்தர் பிள்ளைகள்
எள்ளி நகைப்பதை எண்ணி நீ பார்.

பாசம் படர நேசம் தொடர
நாசம் மதுவைப் போக்குங்ளே.

*வாருங்கள்.....*

ஆடை அழுக்குடன் அந்தப்பிள்ளை பள்ளி
ஆசிரியர் முன் வந்து நிற்க - கெட்ட
வாடைகள் வீசுது ஓடிப்போ வீடென்ன
வாடி வதனம் வருந்துது பார்.

வருத்தம் நீக்கி திருத்தம் காண
வெறுத்து மதுவைப் போக்குங்களே.

*தன்னானே..... 2முறை*

நித்தம் உழைத்திடும் உந்தன் பணந்தன்னை
மொத்தமாய் நீயே குடித்தழித்தால் - உடல்
எத்தனை நாளது தாங்குமோ ஊரினில்
பித்தன் எனும் நாமம் வாங்குமே பார்.

ஊரும் ஏற்ற உறவும் போற்ற
தூர மதுவைப் போக்குங்களே.

*வாருங்கள்.......*

ஊனமுற்ற உடல் உந்தன் உழைப்பிற்கு
ஒவ்வாது போன பின்பதனால் - எங்கும்
காணும் மனிதனைக் கைநீட்டிக் கொஞ்சிப்பின்
கன்னம் களவிற்குத் தள்ளுமே பார்.

நாளும் வாழ்வின் தாழ்வு நீங்க
பாழும் மதுவைப் போக்குங்களே

*தன்னானே.... 2 முறை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் அழிந்து மதி கெட்டுப் போனபின்
மதுவைக் கைவிட்டு என்ன பலன் - உடல்
ஊனமுற முன்பு உந்தன் உறவுகள்
உயர்வை எண்ணி உழைத்திடுவாய்.

மானம் பெருக ஊனம் மருவ
ஈன மதுவைப் போக்குங்களே.

*வாருங்கள்.....*

வந்து நாம் தந்திடும் இந்தக் கருத்துக்கள்
சொந்த மதிதனில் உள்வாங்கி - கொடும்
இந்த மதுவகை உந்தன் பகுதியில்
இல்லா தொழித்திடவாருங்களே

மனித வாழ்வின் புனிதம் காண
மதுவைப் போக்கி வாழுங்களே.

*தன்னானே..... 2 முறை*
*வாருங்கள்.... 3 முறை*

***(குறவன், குறத்தி வேடத்தில் ஆண், பெண்)***

*குறவன்* - றாவணத்துடனும்
*குறத்தி* - இரு கைகளிலும் கலர் றீபன்களுடனும்.

**குறிப்பு -**

எந்த ஒரு ஸ்தாபனம் இந்தத் தெருக்கூத்து நிகழ்வினை முன்னெடுத்துச் சொல்கின்றதோ அந்த ஸ்தாபனத்தின் இலச்சனை மேற்படி குறவன் குறத்தி அலங்கரிப்பு ஆடையில் பொறிக்கப்படலாம்.

குறவன் குறத்தி ஆடலும் பாடலும்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(பாடலின் இராகத்திற்கு அமைவாக ஓரிரு நிமிடம் இசையுடன் ஆடல், அதன்பின் பாடலுடன் ஆடல்).*

பாடல்

***இருவரும்***

மலையில் இருந்து வாறோம் - நாங்கள்
மதுவை ஒழிக்க வாறோம்.
மலையில் இருந்து வாறோம் - கெட்ட
மதுவை ஒழிக்க வாறோம்.
கலையில் பல நல்ல காரியக்குறி சொல்லி
அலையும் மாந்தருக்கு ஆறுதல் கூறிட

*(மலையில் இருந்து.....)*

***குறத்தி வசனம்:***

நஞ்சென மதுவை நாமறிந்த பின்புங்க நெஞ்சத்தால் தொடலாமோ - இங்கு அதை நிலைக்க விடலாமோ, அதன் தொல்லையால் பங்கப்படும் குடும்ப நிலை ஒன்றைப் பாருங்க, நாங்க இப்ப போறோமுங்க - மீண்டும் வரவோமங்க.

இருவரும் (பாடி ஆடிச் செல்லுதல்)
நாங்கள் மலையிலிருந்து வந்தோம் - கொடும்
மதுவை ஒழிக்க வந்தோம்
காலையில் பல நல்ல காரியக்குறி சொல்லி
அலையும் மாந்தருக்கு ஆறுதல் கூறிட.

*(நாங்கள் மலையிலிருந்து.......)*

**(தொடரும்.....)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருச்சுமப்போம் வாரீர்

மண்வளம் காக்கும் மரம்...!
அதற்கு
உரமூட்ட வேண்டியது நீ...!
அதன் சிரம் அறுத்து – உனக்கு
சிம்மாசனம் அமைக்கிறாய்....

கரம் நீட்டி, வரம்கேட்டு,
அந்நியன் காலடியில் – இருக்க
இடம் கேட்கிறாய்...!
தடம் மாறிப்போன வாழ்வு
கரித்துண்டும் மிஞ்சாமல் – உன்
சரித்திரத்தையே மாற்றிவிடும்....!

இருப்பிழந்து போனபின்னே
இருந்தென்ன.... இறந்தென்ன....
கருச்சுமப்போம் வாரீர்....!!
உருச்சிதைந்து போகும்
இயற்கை வளம் காக்க
உருக்கொண்டு எழுவோம்...!

உன்னதங்கள் பல உருவான
உன் மண்ணில்
சன்னதங்கள் நிகழ்த்தவல்ல
நன்மைமிகு எம் மண்ணில்
கருச்சுமப்போம் வாரீர்...!

**இலட்சுமி புத்திரன்**
*கலாஜோதி சனசமூக நிலையம்,*
*இணுவில்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருட் அபிவிருத்தி திட்டங்கள்




சக்தி அமைப்பின் உதவியில் தெல்லிப்பளை பிரிவினால் வெளியிடப்பட்டது.

Jeyan Printers, Inuvil.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org